தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

**வேளாண்மை அறிவியல் நிலையம்**

சிக்கல் நாகப்பட்டினம் மாவட்டம்

*அன்புடையீர் வணக்கம்!*

கீழ்கண்ட செய்திக் குறிப்பினை தங்களின் மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*****

**"75 வது சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழா"**
**இயற்கை விவசாய கருத்தரங்கம் மற்றும் வேளாண் பெருவிழா**

நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்மைத் துறை நாகபட்டினம் மற்றும் மயிலாடுதுறை இணைந்து **75 வது சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழா"வை முன்னிட்டு இயற்கை விவசாய கருத்தரங்கம் மற்றும் வேளாண் பெருவிழா** 26.04.2022 அன்று சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவினை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி வி. ஷகிலா அவர்கள் தொடக்கி வைத்து தலைமையுரையாற்றினார். இவ்வுரையில் வேளாண்மை துறையின் அனைத்து திட்டங்களையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டர். மேலும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்க பட்டுள்ள செயல்விளக்கதிடல்களை கண்டுணர்ந்து பயனடைய கேட்டுக்கொண்டார். தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் மா.ராஜகுமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் விழா நடத்தப்படுவதின் முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். வேளாண்மை இணை இயக்குநர், திரு. ஜா. அகண்டராவ், தோட்டக்கலை துணை இயக்குநர், முனைவர் இரா. திவ்யா, வேளாண்மை உதவி இயக்குநர்(பயிர் காப்பீட்டு திட்டம்) திரு. கா. சிவக்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் திருமதி. புஷ்கலா, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர் திரு.ம.சங்கரநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டு துறைசார்ந்த திட்டங்களையும் தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினர். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் திரு.யு.ஹினோ பர்னான்டோ, முனைவர் கோ.சந்திரசேகர் மருத்துவர் சு.முத்துக்குமார், முனைவர் வே.கண்ணன், முனைவர் அ.மதிவாணன், திரு.க.ரகு, ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றி விவசாயிகளிடையே கலந்துரையாடினர். மேலும் வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இவ்விழாவில் நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டத்தை சார்ந்த 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

ஒப்பம் /xxx

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**